● பாதுகாப்பு மத்தியில் ஆரம்பமான தமிழகச் சட்டப் பேரவை

# ஜெயலலிதாவின் காலில் வீழ்ந்த தமிழக அமைச்சர்கள்!

தமிழகத்தின் பத்தாவது சட்டசபையின் முதலாவது கூட்டத் தொடர் நேற்றுக் கூடியது கூட்டம் ஆரம்பமாகிய போது பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சபையின் தற்காலிகத் தலைவரான ஏ. எம். பொன்னம்மாள் சபை உறுப்பினர்களுக்கான பதவிப்பிரமாணங்களைச் செய்து வைத்தார். முதலமைச்சர் ஜெயலலிதாபர்கூர் தொகுதி பிரதிநிதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இரா. நெடுஞ்செழியன் உட்பட பதினாறு உறுப்பினர்கள் பதவி ஏற்றுக்கொண்டனர். ஆளுங்கட்சிக்கே பா. சொ. பட்டாபிராமன், எதிர்க்கட்சித்தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் முன்னாள் அமைச்சர்களான எம். திருநாவுக்கரசு, கே. கே எஸ் எஸ். ஆர். இராமச்சந்திரன், டொக்ரர் ராமகிருஷ்ணன் முதலியோரும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். இப்பேரவையைப் போல எதிர்க்கட்சியின் எண்ணிக்கை இவ்வளவு குறைவாக இருந்ததில்லை என்று மில்லாதவாறு முப்பது பெண்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 216 பிரசோற்பத்தி ஆனி 18 (02-07-1991) செவ்வாய்

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆளும் கட்சிக்குள் குழப்பம்!

## இந்திய அரசு இன்னமும் மௌனம்

**1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகளால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தற்போது இரு நாடுகளினதும் அரசுகளுக்கும் இடையில் சர்ச்சைகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.**

இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் குறித்த தனது செய்தி விமர்சனம் ஒன்றில் பிரபல பத்திரிகையாளர் மெர்வின்டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பந்தத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் இலங்கையில் ஆளும் கட்சிக்குள்ளேயே இரு பிரிவுகள் உள்ளதாக குறிப்பிடும் மேர்வின்டி சில்வா, முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அண்மையில் மாநாடு ஒன்றில் பேசுகையில் ஒப்பந்தத்தை வரவேற்று பேசியதை சுட்டிக்காட்டுகிறார்.

தற்போதைய ஜனாதிபதி பிரேமதாஸா கம்புறுப்பிட்டி

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை, படையினர் மீது வட்டுவாகலில் தாக்குதல்

முல்லைத்தீவு முகாம் இராணுவத்தினர் மீது மீண்டும் வட்டுவாகல் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

நேற்று முன்தினம் படையினர் வட்டுவாகல் பகுதியில் 4 பொது மக்களின் வீடுகளை எரித்து விட்டு மேலும் முன்னேற முயற்சித்தனர்.

இவர்களை இடைமறித்த புலிகள்அணி இராணுவம் மீது தாக்குதலைநடாத்தினர்.

இதனால் படையினர் பின்வாங்கி முகாம் திரும்பினர்.

சிலதினங்களுக்கு முன்னரும் வட்டுவாகல் கடலோரத்திற்கு வந்த படையினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி விரட்டியமை தெரிந்ததே.

## இந்திய தூதரகத்திற்கு அநாமதேயக்கடிதங்கள்

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக பல அநாமதேயக்கடிதங்கள் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திற்குக் கிடைத்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கிடைத்த கடிதம் ஒன்றில் கொழும்பில் உள்ள இந்திய வானொலி நிருபரே சென்னையில் தேடப்படும் ஒற்றைக்கண் ஆசாமி எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

இந்திய இராணுவம் பலாலியில் வந்திறங்கிய சமயம் அங்கு பலரைப் பேட்டி கண்டு கொண்டிருந்த இந்திய நிருபர் ஒருவரின் படமும் 'இவரே கொலையாளி' என்ற தலைப்புடன் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

## ஆனையிறவு முகாமைச்சூழ இடைவிடாக் குண்டு வீச்சு

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றிய பகுதிகளில் நேற்று பகல் முழுவதும் கடும் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணி முதல் ஒரு மணி நேரமாக வை-12 விமானம், இரு பொம்மர்கள் என்பன இடை

—04 ஆம் பக்கம் பார்க்க

### வீரமரணம்

நேற்று ஆனையிறவு முகாம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் சிவானந்தன் (ந. நகுலேஸ்வரன் கிளிநொச்சி) வீரமரணமடைந்தார்.

## சின்னமடு காவலரண் மீது புலிகள் அருள்89 தாக்குதல்

ஊர்காவற்றுறை சின்னமடு இராணுவ காவலரண் மீது நேற்று முன்தினம் அருள் 89 தாக்குதலை நடாத்தினர்.

இத்தாக்குதலை தொடர்ந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவான மாணவர் விவரம் அனுப்பிவைக்கக் கோரிக்கை

1990 91 புதிய கல்வியாண்டுக்கு தெரிவான பல்கலைக்கழக மாணவர்களின் பெயர் விவரங்களை வடக்கே அனுப்பி வைக்குமாறு கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதமூலம் கேட்டுள்ளார்.

ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் விவரங்களை மானியங்கள் ஆணைக்குழு அந்தந்தப்பகுதி கல்வி. பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## எண்ணெய்எடுத்துவந்தவர்களை படையினர் எரிக்க முயற்சி

மன்னாரிலிருந்து பள்ளிமுனைக்கடலில் படகில் வந்து கொண்டிருந்த ஒன்பதுபேரை கடற்படையினர் மண்ணெண்ணெய்யை இவர்கள் மீது

—04 ஆம் பக்கம் பார்க்க

### சுருட்டுத் தொழில்

## பெண் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டது

இரு பெண் சுருட்டுத் தொழில் உரிமையாளர்களுக்கு சுருட்டுத்தொழிலாளர் சங்க கட்டுப்பாட்டை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தாவடி புதுரோட் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த இரு பெண் உரிமையாளர்களுக்கு முறையே இருபதாயிரம் ரூபாவும், முப்பதாயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் சுருட்டுக்களைச் சுற்றுவதற்கு இருநூறு ரூபா கூலியாக வழங்கப்படவேண்டும் என்ற சங்கத்தின் விதியை மீறி இவர்கள் இருநூறு ரூபாவுக்கு குறைவாக கூலியை தொழிலாளருக்கு வழங்கியதாலேயே இந்த அபராதம்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண முகவர்கள் கொழும்பில் இயங்குகின்றனர்

யாழ்ப்பாணத்தில் இயங்கிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் கொழும்பு பகுதியில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் யாழ்ப்பாணத்தில் இவர்களிடம் பணம் கொடுத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

கொழும்பில் இவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் பொலிஸ்காரருக்கு காட்டிக்கொடுப்பதாக மிரட்டுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரணமானவர்களில் 609 பேருக்கு நிவாரணம்

கடந்த ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இதுவரை மரணமானவர்களில் 609 பேருக்கு நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இதற்காக பதினெட்டு

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## கோடீஸ்வரர்களை பொலிஸ் தேடுகிறது

மோசடி வர்த்தகங்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட 105 கோடீஸ்வரர்கள் தலைமறைவாகியுள்ளதாக விசேட பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்

ஜப்பான், சிங்கப்பூர், டுபாய் ஆகிய நாடுகளின் சில முக்கிய வர்த்தகர்கள் போலிக் கம்பெனிகளுடன் சேர்ந்து பல கோடி ரூபா பெறுமதி

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## சுவிஸ் பத்திரிகையாளர் யாழ் விஜயம்

சுவிற்சலாந்து தேச பத்திரிகையாளர் ஒருவர் யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்துள்ளார். இவர் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு வருகிறார். ப11

## உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கை

இடம்பெயர்ந்தவர்களுக்கு மூன்று வாரங்களும், தொழில் பாதிப்புற்றோருக்கு ஒரு வாரமும் உலர் உணவு நிவாரணம் இலவசமாக வழங்க படவுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதி பணிப்பாளர் திரு. பத்மநாதன் தெரிவித்தார்.

'உ' உலர் உணவு அட்டைக்கு ஒரு வாரத்துக்கு பணத்துக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த வாரம் கப்பலில் உணவுப் பொருள்கள் வந்ததையடுத்தே இந்த நிவாரணம் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார், ப-11

## வளைகுடா யுத்தத்தில் ஒன்றரை லட்சம் பேர் பலி!

பாரசீக வளைகுடாவில் அண்மையில் ஏற்பட்ட யுத்தத்தில் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் ஐம்பது இலட்சம் பேர் வீடுகளை அல்லது தொழில்களை இழந்துள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது.

விமானக் குண்டு வீச்சில் ஐயாயிரத்துக்கும் பதினையாயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான ஈராக்கியப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

சர்வதேச நிவராண உதவியாளர்கள் செய்தியாளர்கள் அமெரிக்க அதிகாரிகள் ஆகியோரின் தகவல் களைப் பெற்று இந்த எண்ணிக்கை மதிப்பிடப்பட்டுள்ளது.

வளைகுடாவில் ஈராக்குடன் நேசப் படைகள் 43 நாள் நடத்திய யுத்தத்தின் இழப்பு இதுவாகும். யுத்தத்தின் போது ஒரு லட்சம் முதல் இருபதினாயிரம் வரையிலான ஈராக்கிய வீரர்கள் மாண்டனர். (11)

## ஒரு வருடத்திற்கு முன் கடலில் காணாமற் போன

# 8 வல்வை மீனவர்கள் பர்மாவில்!

ஒரு வருடத்திற்கு முன் வல்வைக் கடலில் மீன்பிடிப் படகுடன் காணாமற் போன வல்வை வாசிகள் எண்மர் பர்மாவில் உள்ளதாகத் தற்போது அறியப்படுகின்றது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஆவணி மாதம், 13 ஆம்திகதி வல்வைக் கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன இந்த எட்டு மீனவர்களும் படுகாயங்களுடன் பர்மா கடற்படையினால் மீட்கப்பட்டு பர்மா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபின் தற்போது அங்கு தங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமடைந்திருந்தனர்.

வல்வை மீனவர்களான ருசீந்திரம் வடிவராஜ் (22: திருமேனிப்பிள்ளை இராமச்சந்திரன் 47), மாணிக்கத் தியாகராசா கரீந்திரன் (26), இராமநாதன் திருமால் (25), வேதாரணியம் பாலசுப்பிரமணியம் (25) ஆகியோரும் பிற ஊரைச் சேர்ந்த மூன்று மீனவர்களுமே காணாமற் போனவர்களாவர்.

இந்த மீனவர்கள் பர்மாவில் தங்கியுள்ளமை பற்றிய தகவல் அண்மையில் இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. அதனைத்தொடர்ந்து இந்தியாவில் உள்ள வல்வை வாசிகள் இவ்விடயத்தை இங்குள்ள உறவினர்களுக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே எட்டு மீனவர்களும் உயிருடன் உள்ள விடயம் இங்கு தெரிய வந்தது.

இவர்களை மீண்டும் இவர்களின் சொந்த ஊர்களுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் மீனவர்களின் குடும்பத்தவரும், உறவினர்களும் ஈடுபட்டு வருகின்றார்கள். (39)

## தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக

## தட.கள விளையாட்டு விழா

தியாகி ஞாபதிலீபன் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்காக தட.கள (மெய்வல்லுநர்) விளையாட்டு விழா ஒன்றினை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் ஆதரவில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் முதலில் வட்டவைகள் மட்டத்திலும், பின்னர் மாவட்ட மட்டத்திலும் நடாத்தப்படுவதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில் ஒவ்வொரு வட்டவைக்கும் விளையாட்டுப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வட்டவை மட்டத்திற்கான போட்டிகளின் விண்ணப்பங்களை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வட்டவைச் செயலகங்களில் ரூபா 2/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். வட்டவைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 10. 07. 1991க்கு முன்னதாகப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு விளையாட்டு வீரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

எமது பிரதேசத்தில் விளையாட்டுக்களின் தரத்தை உயர்த்துவதன் பொருட்டும், எமது மக்களின் உடல், உள வளர்ச்சியினைப்பாதுகாக்கும் பொருட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். மேற்படி போட்டிகளின் சகல விளையாட்டு வீரர்களும் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர். மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களைச் சந்திக்குமாறும் மேலதிகப் போட்டி விவரங்களைப் பிரதேச செயலகத்திலும், விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

## மறுமலர்ச்சிக் கழக ஏற்பாட்டில்

## வடமராட்சியில் இலவச வகுப்புக்கள்

யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் வடமராட்சி கிழக்குப் பகுதிமாணவர்களுக்கு கணித, விஞ்ஞான வகுப்புக்களை இலவசமாக நடாத்தி வருகின்றனர்.

வடமராட்சி கிழக்குப்பகுதி பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறையைத் தொடர்ந்தே இவர்கள் இவ்வாறு வகுப்புக்களை நடாத்த முன்வந்துள்ளனர்.

சனி, ஞாயிறு விடுமுறைத் தினங்களில் உடுத்துறை, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் இவ்வகுப்புக்கள் நடைபெறுவதாக யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சி கழக வட்டாரங்கள் தெரிவித்தன. 79

## இலங்கையை குறியாககோண்டு

## புதிய இந்திய செயற்கைக்கோள்

இந்தியா அனுப்பிவைத்துள்ள மற்றொரு செ.யற்கைக்கோள் விரைவில் இயக்கி வைக்கப்படவுள்ளது.

இப்புதிய செயற்கைகோள் இலங்கை, சிங்கப்பூர் என்பனவற்றை குறியாகக் கொண்டு செயற்படுமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் பரிமாற்றத்தை முக்கிய நோக்காகக் கொண்ட இப் புதிய கோள் இயங்கத் தொடங்கியதும் இந்தியாவின் சகல மாநிலத் தலைநகர்களிலும் புதிய இரண்டாவது அலைவரிசை வானொலிச் சேவைகள் இயங்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

## டோணால்ட் போட்டித் தோடர்; சனி, ஞாயிறு ஆட்ட முடிவுகள்

'டொணால்' வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை விளையாட்டுக் கழக அணி, பலம் பொருந்திய ஸப்றா அணியை எதிர்பாராத விதத்தில் தோற்கடித்தது பருத்தித்துறை அணி 46.2 பந்து மாற்றங்களில் 138 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது

ஸப்றா அணி அதன் துடுப்பாட்டத்தில் 28.4 பந்து மாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினால் 21 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

ஜிரான்லி விளையாட்டுக் கழகத்திற்கும், கொக்குவில் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஜிரான்லி விளையாட்டுக் கழக அணி 1.15 பந்து மாற்றங்களில் 25 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டம் இழந்தது. கொக்குவில் விளையாட்டுக் கழக அணி வெற்றி இலக்கான 26 ஓட்டங்களை இலக்கு எதையும் இழக்காமல் 6 1 பந்து மாற்றங்களில் பெற்றுப் புதிய சாதனை ஒன்று படைத்துள்ளது (16)

## கல்வி நிலை கலந்துரையாடல்

மாணவர்களின் தற்போதைய கல்வி நிலை தொடர்பாக தமிழ் ஆசிரியர் சங்க, தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் விடுதலைப்புலிகள் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் கரிகாலன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட செயல் நிர்வாகப் பொறுப்பாளர் இராஜன், தொழிற்சங்கப் பொறுப்பாளர் ரவி ஆகியோர் பங்குபற்றினர். தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும், யாழ் மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## ஆசீர்வாதப்பர் பெருநாள்

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருக்கும் புனித ஆசீர்வாதப்பர் ஆலய பெருநாள் இன்று இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

இப் பெருவிழா 11 ஆம் திகதி வியாழன் காலை திருப்பலியுடன் முடிவடையும்.

## இடி அமீன் வெளியேற்றிய ஆசியர் மீண்டும் உகண்டாவில்

1972ஆம் ஆண்டு உகண்டாவின் முன்னாள் அதிபர் இடிஅமீனினால் வெளியேற்றப்பட்ட வெளிநாட்டவர்கள் மீண்டும் அங்கு திரும்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களிடம் அப்போது பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளை மீள வழங்கவும் புதிய உகண்டா அரசு இணங்கியுள்ளது.

இடி அமீனினால் 1972இல் 1000க்கும் மேற்பட்ட ஆசிய நாட்டவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## சுற்றுப்போட்டி

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள அமரர் கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான தவிர்த்தல் முறையிலான, உதைபந்தாட்டப் போட்டி, இம்மாதம் 3 ஆம் திகதி, பாஷையூர் சென் அந்ரனீஸ் விளையாட்டுத் திடலில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ் பல்கலைக் கழக அணி உட்பட 12 கழகங்கள் பங்குபற்றவுள்ள இப்போட்டியில் முதல் இடத்தைப் பெறும் அணிக்கு முரசொலி விளையாட்டுத்துறை செய்தியாளர் கப்டன் டீ. ஏ. எம். குணசிங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பெறுமதிமிக்க சுழல் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளதாகவும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அன்பளிப்புச் செய்த வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் கே. யதுகுலசிங் தெரிவித்தார். (16)


## சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்

### பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் 20 - 07 - 1991 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு றொபட் வில்லியம் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் அவற்றினை 13-07-1991க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

காலைப் போசனம், மதிய போசனம் ஆகியனவற்றில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 18-07-1991க்கு முன்னர் ரூபா 65/-ஐ பொருளாளர் திரு. ந.ஜே. ஞானப்பொன்ராசாவிடம் செலுத்தி உதவும்படி அன்புடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

நிகழ்ச்சி நிரல் அழைப்பிதழுடன் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

க. ந. யோ. மொறிஸ்
செயலாளர்

சென் ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்
02. 07. 1991

07008



## முரசொலி

## பயிலுநர் பத்திரிகையாளர்

எமது நிறுவனத்தில் பத்திரிகையாளராகப் பயிற்சி பெறவிரும்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: க. பொ. த உயர்தரம் அல்லது க. பொ த சாதாரணம் தமிழ் உட்பட 6 பாடங்களில் விசேட சித்தி.

(பத்திரிகைத்துறையில் ஈடுபாடு உள்ளவர்களுக்கும் ஆங்கில அறிவுடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.)

வயதெல்லை: 20 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பயிற்சிக் காலம்: 6 மாதம்

மாநகர எல்லைக்குள்ளும் எல்லையின் இரண்டு மைல் சுற்றாடலினுள்ளும் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

சான்றிதழ்களுடனும் விண்ணப்பத்துடனும் முரசொலி காரியாலயத்தில் காலை 10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் 5. 7. 91 க்கு முன் சமுகம்தரவும்.

முரசொலி,
டச்சுவீதி,
கல்வியங்காடு.

பொதுமுகாமையாளர்.

# ராஜீவுக்கு பிரேமாவும் எதிரியே!

## தலைவர்களைதீர்க்கும்எண்ணம்புலிகளுக்கில்லை

ராஜீவ் கொலையுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்திரா காங்கிரஸ்கட்சி சம்பந்தப் படுத்துவதைத் தமிழ்நாடு காங்கிரஸ் முக்கிய பிரமுகர் சுப்பு கடுமையாகக் கண்டித்துள்ளார்.

'விடுதலைப்புலிகளை நீண்ட காலமாகவே அறிவேன். அவர்கள் எந்தக்காலத்திலும் தமிழக அரசியலில் தலையிட்டது கிடையாது. அதேபோல் இந்தியத் தலைவர்கள் எவரையும் தீர்த்துக் கட்டும் எண்ணம் அவர்களுக்கு இருந்ததில்லை. காரணம் அவர்கள் தமிழக அரசியலிலிருந்துதொலைதூரம் விலகியே நின்றுவிட்டனர்' என சுப்பு தமிழகப்பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இலங்கையில் களத்தில் நின்று போராடியவர்கள் - போராடுபவர்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்கவில்லை என்பதைக் காரணமாக வைத்து அவர்களை எதிரிகளாகச் சித்தரித்துப் பிரசாரம் செய்யக்கூடாது.'

'இந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை புலிகள் மட்டும் எதிர்க்கவில்லை. இன்றைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவும்தான் எதிர்த்தார். மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஒப்பந்தத்தைக் குப்பைக் கூடையில் வீசி எறிவோம் என்று கடந்த தேர்தலின்போது அவர் பிரசாரம் செய்தார். ஆட்சிக்கு வந்த பின்னர் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று அறிவித்தார். இதனால் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திய ராஜீவுக்கு பிரேமதாசாவும் கடுமையான எதிரி. அவர் மீண்டும் ஆட்சிக்கு வருவதை இதனால் அவர் விரும்பாதிருந்திருக்கலாம்'.

'ராஜீவ் படுகொலைக்குச் சில நாள்களுக்கு முன்பு சென்னையில் உள்ள ஒரு தூதரகத்தில் சில உயர் அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டதாகவும் தகவல் உண்டு. புதிய நபர்களின் நியமனத்துக்குப் பின் அந்த தூதரகத்தின் நடவடிக்கையையும் ஆராய வேண்டும்' எனச் சுப்பு அப்பேட்டியில்தெரிவித்துள்ளார்.

திரு சுப்பு கடந்த தேர்தலில் சென்னைத் துறைமுகம் தொகுதியில் கலைஞர் கருணாநிதியைக் காங்கிரஸின் சார்பில் எதிர்த்துப் போட்டியிட்டு' 800 வாக்குகளினால் தோல்வியடைந்தவர். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ப-11,74

## பேச்சு இல்லை நடவடிக்கையே

## என்கிறார் முதல்வர் ஜெயலலிதா

'புலிகள் தொடர்பாக இனி பேசவே மாட்டோம் - நடவடிக்கையே எடுடபோம்' இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

தமிழகத்தில் வரலாறு காணாத சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைத்தமிழர்களைப் பொலிஸில் பதியுமாறு கூறும் பெரிய அளவான பெருமளவு சுவரொட்டிகள் தமிழகமெங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

## மடுவில் இன்று ஆடி உற்சவம்

யாத்திரைத் தலமான மடுமாதா தேவாலய ஆடி மாதத் திருநாள் இன்று நடைபெறுகிறது காலை திருநாள் பலியும், அதனையடுத்து திருச்சொரூப பவனியும் இடம் பெறுகிறது.

இங்கு தங்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இத்திருநாளில் கலந்து கொள்வார்கள்.

## முதலாம் தரத்திற்கு

## பதவியுயர்த்த நடவடிக்கை

அரசாங்கத் தட்டெழுத்தாளர்கள் பலர் முதலாம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படவுள்ளனர்.

அரசாங்க தட்டெழுத்தாளர்களில் வகுப்பு இரண்டு (அ) விலுள்ள தகுதியுடைய உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதன் மூலம் 1990 -01 - 01 வரை அரசாங்கத் தட்டெழுத்தாளர் சேவையின் முதலாம்தர வெற்றிடங்களைநிரப்பநடவடிக்கை மெடுக்கப்பட்டிருக்கிறது.

## இலவச நிவாரண மட்டத்தை 3500 ஆக உயர்த்தக் கோரிக்கை

ஓய்வூதியர்களுக்கான இலவச நிவாரண மட்டத்தை 1500 ரூபாவிலிருந்து 3500 ரூபாவாக உயர்த்துமாறு யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சபைத் தலைவர் ஏ. வி. ஏ. ஜே. விஜயரட்ணம் கோரியுள்ளார்.

மேற்படி சங்கத்தின் நான்காவது நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் யாழ் பிரதான வீதியில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்ற போது இது பற்றி மேலும் ஆராயப்பட்டு, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இக் கூட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கும் 260 ரூபா விசேட வாழ்க்கைச் செலவுப்படியை வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், ஜனாதிபதிக்கும் மகஜர் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## மாணவர் முத்திரைக்கு கட்டுப்பாட்டுவிலைக்குப் பொருள்

பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைகளுக்கு கட்டுப்பாட்டு விலையில்உலர் உணவுப் பொருள்கள் வழங்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

முன்பு அதிக விலைக்கே கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொருள்களை மாணவர்களுக்கு வழங்கி வந்தன.

யூலை முதலாம் திகதிமுதல் இவைகட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட வேண்டுமெனச் சுற்று நிருபங்கள் பல நோக்க்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (39)

## 'அவரு மட்டுமே இறந்தார்...... எங்க தலைவர்ணாநாங்க...'

ராஜீவ் கொல்லப்பட்ட சமயம் தமிழக முக்கிய காங்கிரஸ் பிரமுகர்கள் அவரை விட்டு விலகியே இருந்தார்கள் என்ற செய்தி தி. மு, க பிரமுகர்களுக்கு நல்லதொரு பிடியாகிவிட்டது.

தி. மு. க. ஆர்க்காடு வீரசாமி அண்மையில் ஒரு வைபவத்தில் உரையாற்றுகையில் இக் கருத்தைச் சுட்டிக் காட்டினார்.

'கலைஞர் எங்கேயாவது போகிறார் என்றால் அவரைச் சூழ நாங்கள் - தி. மு. க பிரமுகர்கள் சூழ்ந்து கொண்டு போவோம். ஆனால் ராஜீவ்காந்தி வந்திருக்கிறார். இறந்து போனது வேதனைக்குரியது தான். ஆனால் அந்த விபத்திலே அவர் மட்டும் தான் இறந்தாரே தவிர, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர் ஒருவர் கூட விபத்துக்குப் பலியாகவில்லை பலியாக வேண்டுமென்று நான் விரும்பக்கூடியவனுமல்ல. ஆனால் தலைவருக்கு விபத்தென்றால் அவரோடு செத்து மடிவது தான் தி.மு க வில் இருக்கின்ற எங்களுக்குப் பெருமை. ஆனால் அவரை எங்கேயோ விட்டுவிட்டு முன்னரே மேடையில் வந்து உட்காருகிறவர்கள் தான் இந்தக் காங்கிரஸ் காரர்கள்' என அங்கு பொரிந்து தள்ளினார் ஆர்க்காடு.

## 1980 இல் சேர்க்கப்பட்ட ஊழியர்கள் விரைவில் உறுதிப்படுத்தப்படுவர்

1980 ஆம் ஆண்டளவில் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட யாழ் அரச செயலகத்தையும், அதன் உப அலுவலகங்களையும் சேர்ந்த பல ஊழியர்கள் விரைவில் சேவையில் உறுதிப்படுத்தப்படவுள்ளார்கள்.

பொது வேலை நிறுத்தம் நடைபெற்ற காலங்களில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்காக எழுதுவினைஞர் தரத்தில் பலர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களது நியமனக் கடிதத்திற் குறிப்பிட்டவாறு சகல தகைமைகளையும் இவர்கள் முன்னர் பெற்றிருந்த போதிலும் இவர்களுக்குச் சம்பள ஏற்றங்கள் வழங்கப்படவோ சேவையில் உறுதிப்படுத்தப்படவோ இல்லை.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ் அரச அதிபர் இவ்விடயம் தொடர்பாக உரிய உயர் அதிகாரிகளோடு கலந்துரையாடியதன் விளைவாக வெகு விரைவில் இவ் உத்தியோகத்தர்களது பதவியில் உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்டது. (47)

## 'யோவ் பேசாதே!.... ....நீ ஓடியவனாச்சே!'

ராஜீவ் கொலைக்குத் தமிழகப் பொலிஸாரின் கவனயீனமும் காரணம் எனக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதனால் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் - பொலீஸாருக்குமிடையே அங்கு கருத்து வேறுபாடுகள் வளர்ந்து வருகின்றன.

சில தினங்களுக்கு முன் ஸ்ரீ பெரம்புதூரில் ராஜீவ் கொல்லப்பட்ட இடத்தில் ஒரு அஞ்சலி நிகழ்ச்சி நடந்தது. அந்த அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழகக் காங்கிரஸ் முக்கிய பிரமுகர் ஒருவரை அங்கு கடமையிலிருந்த பொலிஸ்காரர் ஒழுங்குபடுத்த முயன்றபோது இருவருக்குமிடையே வாக்குவாதம் தோன்றியது.

'அன்னிக்குப் பாதுகாப்பு ஒழுங்காகக் கொடுத்திருந்தா தலைவரை இழந்திருப்போமா? இன்னிக்கு வந்துட்டாங்க எங்களைக் கட்டுப்படுத்த...' என்று எரிந்து விழுந்தார் அந்தப் பிரமுகர்.

உணர்ச்சியைக் கட்டுப்படுத்தமுடியாத பொலிஸ்காரர் 'யோவ் நீ பேசாதே! அன்னிக்கு ராஜீவ் அடிபட்டு விழுந்த மாத்திரத்துல நீ தலைதெறிக்க ஸ்பாட்டை விட்டு ஓடியவனாச்சே! கார்ல நீ ஏறி ஓடினது எல்லோருக்கும் தெரியும். அன்னிக்கு ஓடினவன் இன்னிக்குத் தானே இங்கே வர்றே.....' என்று சத்தம் போட அங்கு ஒரேகளேபரம்!

ராஜீவ் குண்டு வெடிப்புக்கு இலக்காகிக் கீழே விழுந்து கிடந்த சமயம் அங்கு திரண்டு இருந்த காங்கிரஸ் பிரமுகர்கள் எல்லோரும் ஓட்டம் பிடித்ததாகவும், ராஜீவின் உடலை எடுத்துச் செல்லக் கூடத் தகுந்த வாகனமில்லாது திறந்த பொலிஸ் ஜீப்பிலேயே எடுத்துச் செல்லும் நிலை இருந்ததாகவும் தகவல்கள் வெளிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தயாராகின்றன

1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் இப்போது துரிதமாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்து இந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

அமைச்சுக்கள் இலாக்காக்கள் ஆகியவற்றில் வீண் விரயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் இந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

இம்முறை இந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்க உலகவங்கியிடமிருந்து பெருமளவில் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த மாதம் பட்ஜெட் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (74)

## சகலஉள்ளூராட்சிசபைகளையும் குடியரசுகளாக மாற்ற ஆலோசனை

சகல உள்ளூராட்சி மன்றங்களையும் குடியரசுகளாக மாற்றும் யோசனை குறித்து அரசு ஆலோசித்து வருவதாக ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சிச் சபைகள் நாட்டின் நிர்வாகத்துறையில் முக்கிய இடம் வகிக்கின்றன.

இதனால் பரிபாலனத்துறையில் முக்கிய இடம் தற்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் அவற்றைக் குடியரசுகளாக மாற்றுவது குறித்தும் பரிசிலிக்கப்படுகின்றது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மாத்தளைகிராமங்கள்சுற்றிவளைப்பு

## 100 வாலிபர்கள் கைது!

மாத்தளை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள அங்கும்புற பன்சலத் தன்னைக் கிராமங்கள் பொலிஸாரினால் சுற்றிவளைத்து தேடப்பட்டது.

மாத்தளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் 400 பொலிஸார் இச் சுற்றிவளைப்பில் ஈடுபடுத்தப்பட்டனர் சுற்றிவளைப்பில் 100 வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர்.

## நடந்த களைப்பினால் மாரடைப்பு; தடைமுகாமில் முதியவர் பலி!

வடபகுதியில் இருந்து கொழும்பு சென்ற ஆர். ஜே ஞானப்பிரகாசம் (74) என்ற வயோதிபர் தாண்டிக்குளம் தடைமுகாம் அருகில் மாரடைப்பினால் உயிரிழந்தார்.

தாண்டிக்குளம் சுற்றுவழிப்பாதையைக் கடந்து கால்நடையாக வந்துகொண்டிருக்கையில் களைப்பினால் இந்த வயோதிபருக்குத் திடீர் மாரடைப்பு ஏற்பட்டதாகவும், வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் அவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உற்சவம்

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உயர் திருவிழா 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 7 ஆம் திகதி காலை திருவிழா திருப்பலி, தேர்ப்பவனி என்பவற்றுடன் முடிவடையும்.

# நெல்லியடி வித்தியாலயப் பிரிப்பு பணிப்பாளரினால் இடைநிறுத்தம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை ஆண் பெண் எனப்பாகுபாடுகாட்டிப் பிரிக்க எடுத்த முயற்சி மாணவர், பெற்றோர் ஆசிரியர்கள் எதிர்த்ததினால் அம் முயற்சி கைவிடப்பட்டது.

மாணவர் பகிஷ்கரிப்பும் பெற்றோர் அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் மகஜரினை ஏற்று யாழ் கல்விப் பணிப்பாளர் இவ் வித்தியாலயம் பிரிப்பதை இடை நிறுத்தம் செய்துள்ளார்.

இது விடயமாக 28. 6. 91 வெள்ளிக்கிழமை வித்தியாலய மாணவர்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்தனர். பெற்றோர், ஆசிரியர். அபிவிருத்திச் சங்கம் போன்றவை கல்விப் பணிப்பாளருக்கும் வடமராட்சி கோட்டக் கல்வி அதிபருக்கும் அவசர மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்தனர் இவற்றைக் கவனத்தில் கொண்ட பணிப்பாளர் கோட்டக் கல்வி அதிபருக்கு ஊடாக அவசர இடைநிறுத்தக்கோரும் உத்தரவு ஒன்றினைப்பிறப்பித்துள்ளார். (39)

## நேர்முகப்பரீட்சை 20 ஆம் திகதி ஒத்திவைப்பு

வெளிக்களப் போதனாசிரியர், குடியேற்ற உத்தியோகத்தர் ஆகியோரைத் தெரிவு செய்யும் நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு காணி அமைச்சின் செயலாளர் ஆர். யோகநாதன் அறிவித்துள்ளார்:

வடக்குக் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தில் இப்பதவிகளுக்கு நேர்முகப்பரீட்சை திருகோணமலையில் கடந்தமாதம் நடைபெற விருந்தது குறிப்பிடத்தக்கது

போக்குவரத்துச் சீரின்மை, பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களால் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்துதிருகோணமலைக்கு செல்லமுடியாதிருப்பதாக சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது 33

## பனம் சீனி தயாரிக்க சீனிப்பாணி உற்பத்தி

மானிப்பாய் தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாயில் செயற்பட்டு வரும் சங்க தொழிற்சாலையில் பனம் சீனி தயாரிப்பதற்கு பயன் படுத்தப்படும் சீனிப்பாணியை உற்பத்தி செய்து வருகின்றது.

இதுவரை சுமார் 2000 போத்தல் சீனிப் பாணி உற்பத்தி செய்யப்பட்டு சீனி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

தற்போது கையிருப்பில் 4000 போத்தல் சீனிப்பாணி இருப்பதாக மேற்படி தொழிற்சாலை உற்பத்தி முகாமையாளர் முரசொலிக்குத் தெரிவித்தார் (13)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியா நோய் பரவுகிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளதுடன் மலேரியா நோய் பலருக்குப் பீடித்துள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

மலேரியா தடுப்பு வேலைகளை மேற்கொள்ள மலத்தியோன் மருந்து கொழும்பிலிருந்து கடந்த ஒரு வருடமாக அனுப்பப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மலேரியா நோய்க்கான மருந்து வகைகளும் போதியளவு வருவதில்லை எனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (38[

### தட்டுப்பாடு

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் மின்சார வசதிகள் இன்றி அங்கு தங்கும் நோயாளிகளும், கர்ப்பிணிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை மருந்து வகைகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 38

### பெண்...

விதிக்கப்பட்டதாக சங்கத் தலைவர் செல்லையா உருத்திரா தெரிவித்தார்

இதேபோல வேறு சிலரும் தொழிலாளருக்கு குறைந்த கூலியை வழங்கியதாகமுறைப்பாடுகள் கிடைத்து விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இனிமேல் இவ்வாறு சங்கக் கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார் (ப 11)

### கோடீஸ்வரர்களை ..

யான பொருள்களை இவ்வர்த்தகர்கள் கடத்தி வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

போலி சுங்க அனுமதிப் பத்திரத்தைக் காட்டி பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையும் சில கோடீஸ்வரர்கள் கொழும்புத் துறைமுகத்திலிருந்து அப்புறப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

### தெரிவான...

யாழ் பல்கலைக்கழக மாணவர் அனுமதி விவரம் அனுப்பப்படாததால் 'கெல்ற்' ஆங்கில வகுப்பு மற்றும் வெளிக்கள பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாவதில் காலதாமதமாகின்றதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-11)

### மரணமானவர்களில்...

மில்லியன் ரூபா புனர் வாழ்வு அமைச்சினால் யாழ் செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

காயமடைந்த 75 பேருக்கு நான்கு லட்சத்து முப்பத்தி ஐயாயிரம் ரூபா வழங்கப்படும் எனவும், மரணச் செலவுக்கு 102 பேருக்கு 2 லட்சத்து நாலாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப11)

## அம்புலன்ஸ் சேவைக்கு போதிய டீசல் இல்லை

தெல்லிப்பழையில் சேவையாற்றும் அம்புலன்ஸ் வண்டிக்கு போதியளவு எரிபொருள்வழங்கப்படுவதில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட இந்த அம்புலன்ஸுக்கு யாழ் செஞ்சிலுவைச்சங்கமே எரிபொருள் வழங்கிவருகிறது.

ஒருநாளைக்கு பத்து லீற்றர் டீசல் மட்டுமே வழங்கப்படுவதாகவும், இரவு நேரங்களிலோ சனி, ஞாயிறு விடுமுறை நாள்களிலோ எரிபொருள் வழங்கப்படுவதில்லை எனவும் இதனால் லீவு நாள்களிலே அம்புலன்ஸ் சேவையாற்றுவது மிகவும் சிரமமாக இருப்பதாகவும் அம்புலன்ஸ் சேவையாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு முறை யாழ் பெரியாஸ்பத்திரிக்குப் போய்வர 3லீற்றர் டீசல் தேவைப்படுவதாகவும் கடுமையான தாக்குதல் சம்பவங்ள் எதுவும் இடம் பெற்றால் மக்களுக்கு சேவையாற்ற முடியாத நிலை ஏற்படலாம் எனவும் தெரிவித்தனர். (ப 10)

### வங்கிக் கிளை கொடுப்பனவு

மே மாத ஒய்வூதியம் இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் இம் முறை பணமாக வழங்கப்படவுள்ளது ஒய்வூதிய வவுச்சர் கிடைத்ததும் உடனடியாக வங்கியில் தொடர்பு கொள்ளும் படி முகாமையாளர் கேட்டுள்ளார்.

### புவியியற் கருத்தரங்கு

புவியியல் சம்பந்தமான கருத்தரங்கு இன்று மாலை 3 மணிக்கு யாழ் பல்கலைக் கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் இ... ரவேல் பாலஸ்தீனப் பிரச்சினை பற்றி புவியியற் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றவுள்ளார்.

இதில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு புவியியற் கழகத்தினரால் கேட்டுக் கொள்ளப்படுகிறது. ய-11

### ஆனையிறவு ..

விடாது குண்டு வீச்சை நடாத்தின.

மீண்டும் நண்பகல் 12.30 மணிமுதல் இருமணி நேரமாக பொம்மர்களும் ஹெலிக்கப்டர்களும் தாக்குதலை நடாத்தின. 79

### இலங்கை ..

யில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய போதுஅந்த ஒப்பந்தம் துரோகத்தன்மையானது இதனால் இரு வருடங்களாக நாடே தீப்பிடித்து எரிந்தது என்று குறிப்பிட்டாராம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி ராஜீவ் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களின் போது வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்வொப்பந்த அமுல் குறித்தும் குறிப்பிட்டிருந்தது.

எனினும் ராஜீவ் கொலையை அடுத்து புதிதாக பதவியேற்றுள்ள பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான அரசு இதுவரை ஒப்பந்தம் குறித்து இதுவரை எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை எனச் சுட்டிக்காட்டுகிறார் மெர்வின் டி சில்வா.

தமிழக முதலமைச்சரும் முன்னைய ஒபபந்தம் செயலிழந்து விட்டது புதிய ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப் படவேண்டும் என கூறியிருந்தமை இங்கு குறிபபிடத்தக்கது.

## பலாலியிலிருந்து ஷெல் இளைஞர் படுகாயம்

நேற்று மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை பலாலியிலிருந்து இராணுவத்தினர் ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்களை ஏவினர் இரவும் தாக்குதல் தொடர்ந்தது.

இச் ஷெல்கள் மாவிட்டபுரம், தெல்லிப்பழை தோட்டக்கரைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் படுகாயமுற்றார். அளவெட்டிவடக்கைச்சேர்ந்த தர்மராசா ஸ்ரீக்குமார் 16 வயது என்பவரே காயமபட்டவராவார். 79

### இளைஞர் விவரம் சேகரிப்பு

கொழும்பில் கடந்த சில தினங்களுக்கு முன் கைதான வடபகுதி இளைஞர்களிடம் அவர்கள் கொழும்புக்கு வந்த காரணம் வடபகுதியில் அவர்களுடைய வதிவிடம் ஆகியனவற்றைப் பொலிஸார் விசாரிப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிலருடைய வாக்கு மூலங்கள் பதியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

## நிர்மாண வேலைகள் பூர்த்தி மேஜர் ரஞ்சன் நினைவாக சிறுவர் பூங்கா திறக்கப்படும்

மேஜர் ரஞ்சன் (சித்தப்பா) ஞாபகார்த்தமாக பருத்தித் துறையில் "மேஜர் ரஞ்சன் ஞாபகார்த்த சிறுவர் பூங்காவும் வடமராட்சி மாவீரர் நடுகல் கோட்டமும்" நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன.

இச் சிறுவர்பூங்காவும் வடமராட்சி மாவீரர் நடுகல் கோட்டமும் நிர்மாணவேலைகள் தற்போது பூரணமடையும் நிலையில் இருக்கின்றன.

பருத்தித்துறை முதலாங் கட்டைச் சந்தியில்நிர்மாணிக்கப்பட்டுவரும் இச் சிறுவர் பூங்காவிலும் வடமராட்சி மாவீரர் நடுகல் கோட்டத்திலும் அழகிய பூங்காவில் வடமராட்சி மாவீரர்களின் உருவப்படங்களும் இடம் பெறவுள்ளன.

இங்கு அமையவுள்ள மாவீரர் பொதுநூலகத்தில் மாவீரர்களின் வரலாறுகள் புகைப்படங்கள் உட்பட தமிழீழவிடுதலைக்கான பல்வேறுவகையான விவரங்கள் உள்ளடக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

### எண்ணெய்...

ஊற்றிஎரிக்க முயன்றுள்ளனர்.

அப்படகில் தங்களுக்குத் தேவையான பொருள்களுடன் கூடுதலான மண்ணெண்ணெய் கொண்டு வந்ததைக் கண்ட படையினர் ஆத்திரமுற்றே இவர்களை எரிக்க முயன்றுள்ளனர்.

பின்னர் பொருள்களைப் பறிமுதல் செய்ததுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.(79)

### சின்னமடு...

முகாமில் இருந்து படையினர் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். புளியங்கூடல் சந்தியை நோக்கி கடும் ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டது. 79

### ஜெயலலிதாவின் ..

உறுப்பினர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடக்கூடிய தொன்றாகும்.எல்லாவற்றையும்விட இப்பேரவையின் பாதுகாப்புப் போல் முன் எப்போதும் இருக்கவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன

மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் அமைச்சரைக் கொண்ட விசேட சபையாக இச் சபை விளங்குவதாகச் செய்தியாளர்கள்கருத்துவெளியிட்டுள்ளனர்.

நேற்று பதவியேற்ற அமைச்சர்கள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் காலிலும் வீழ்ந்து வணங்கியதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

### அதிசிறந்த பரிசு பெற்றார்



இலங்கை வேதாகம சங்கம், கொழும்பு மெதடிஸ்த கல்லூரியில் நடாத்திய 27 வது அகில இலங்கை வேதாகம புதிர்ப் போட்டியில் நல்லூர் பரியாக்கோடி ஆலயத்தைச் சேர்ந்த மயில்வாகனம் - கிருஷ்ஷியா (பொபி) அகில இலங்கைக் குரிய அதிசிறந்த போட்டியாளருக்கான வெற்றிக் கேடயத்தையும் அதி திறமைச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். சென்ற வருடமும் அகில இலங்கைக்குரிய அதி திறமைச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் இக் கேடயத்தைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும் அத்துடன் இவர் தலைமை தாங்கிச் சென்ற பரியாக்கோடி ஆலயத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பிரிவும் இவ் வருடமே முதல் முறையாக அகில இலங்கையில் முதலாவது இடத்தைப் பெற்று சம்பியன் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுள்ளது.

நாயன்மார் கட்டைச் சேர்ந்த இவர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியுமாவார். 07011

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 02.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.